ந.க.எண்.5378/2020/ஊவ.3　　　　　　　　　　　　　　　　நாள் : .12.2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு

நாகப்பட்டினம் மாவட்டம்

## அறிவிக்கை (NOTIFICATION)

### பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | - | பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் |
| 2. | பணியின் தன்மை | - | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை செய்து முடித்தல் மற்றும் இதர அனைத்து திட்ட பணிகளையும் மேற்பார்வையிடுதல் |
| 3. | ஊதியம் | - | ரூ.35,400 – 1,12,400 என்ற ஊதிய அட்டவணையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4. | வயது | - | 2020 ஜூலை மாதம் 1ம் தேதி அன்று 35 வயதிற்கு மிகாதவராக இருத்தல் வேண்டும். |
| 5. | மொத்த பணியிடங்கள் | - | 18 |
| 6. | இடஒதுக்கீடு விவரங்கள் | - | |

| Category | No. |
|---|---|
| **Backlog Vacancies** | |
| Scheduled Castes (Backlog Vacancies) | 1 |
| **Regular Vacancies** | |
| General Turn | 3 |
| General Turn (Women) | 2 |
| General Turn (Ex-Serviceman) | 1 |
| Backward Classes (Other than Backward Class Muslim) | 2 |
| Backward Classes (Other than Backward Class Muslim) (Women) | 1 |
| Backward Classes (Other than Backward Class Muslim) (Ex-Serviceman) | 1 |
| Backward Classes (Muslim) (Women) (Destitute Widow) | 1 |
| Most Backward Classes and Denotified Communities | 1 |
| Most Backward Classes and Denotified Communities (Locomotor Disability including cerebral palsy, leprosy cured, dwarfism, acid attack victims and muscular dystrophy) | 1 |
| Most Backward Classes and Denotified Communities (Women) | 1 |
| Scheduled Castes | 2 |
| Scheduled Castes (Arunthathiyar on preferential basis) | 1 |
| Total | 18 |

| | | | |
|---|---|---|---|
| 7. | கல்வித் தகுதி | - | DIPLOMA IN CIVIL ENGINEERING கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். இதற்கான கல்வியினை முழு நேர அல்லது பகுதி நேர (Regular / Part Time) படிப்பு முறையில் மட்டுமே பெற்றிருக்க வேண்டும். தொலைத்தூரக் கல்வி முறை (Distance Mode) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பல்கலைகழக மானிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பல்கலைகழகம் அல்லது நிறுவனத்தில் இருந்தும் கட்டுமான பொறியியலில் இளங்கலை பட்டம் பெற்ற நபர்களுக்கு [BACHELOR OF ENGINEERING(CIVIL)] முன்னுரிமை வழங்கப்படும். |
| 8. | கடைசி நாள் | - | **08/01/2021** பிற்பகல் **5.45** மணி வரை |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. விண்ணப்பப்படிவத்தில் உள்ள விபரங்களை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
7. அரசு விதிகளின்படி இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு)–க்கு அலுவலக வேலை நாட்களில் காலை **10.00** மணி முதல் மாலை **5.45** மணி வரை நேரிலோ அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி), அறை எண் 213, இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ **08/01/2021** (வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் **5.45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு எழுத்துத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து தேர்வு நுழைவுச்சீட்டு **(Hall Ticket)** அனுப்பி வைக்கப்படும்.

பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மையத்திற்கான (National Career Serivce Portal) <u>www.ncs.gov.in</u> என்ற இணைணதளத்திலும் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான <u>www.nagapattinam.tn.nic.in</u> என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

07/12

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**நாகப்பட்டினம்.**

7/12/2020 7/12/2020 8-12-2 7.12.2020